DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.No.54/2025**
Prosecution Witness P.W.16

Name : **திரு.Dr.ராகுல்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 17.03.2026**
(சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பெரம்பலூர் தனலட்சுமி ஸ்ரீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.09.2024-ம் தேதியன்று தேனி அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் போதகராக நான் அலுவலில் இருந்தபோது சின்னமனூர் காவல் நிலைய குற்ற எண். 349/2024 வழக்கில் சம்பந்தப்பட்ட 39 வயது மதிக்கத்தக்க சென்றாயன் என்பவரது உடற்கூறாய்விற்க்காக வேண்டுகோள் கடிதத்துடன் தலைமை காவலர் 1730 சீமான் என்பவர் என் முன்னிலையில் அன்றைய தினம் 11:45 மணிக்கு அங்கமச்ச அடையாளங்களை அடையாளம் காட்டி என்னிடம் ஒப்படைத்தார். நான் அங்க, மச்ச அடையாளங்களை சரி பார்த்து அன்றைய தினம் 11:50 மணிக்கு எனது உடற்கூறாய்வை தொடங்கினேன். அந்த உடம்பில் பிணவிறைப்பானது முற்றிலும் முறிந்த நிலையில் இருந்தது. அந்த உடலானது சீரான உடல்வாகுடன் காணப்பட்டது. கை மற்றும் கால் விரல் நகங்கள் வெளிறிய நிலையில் காணப்பட்டது.

**பிரேத பரிசோதனையில் குறிப்பிடப்பட்டுள்ள காயங்களை ஆங்கிலத்தில் கூறியுள்ளார் அந்த காயங்கள் பின்வறுமாறு**

## FOLLOWING ANTEMORTEM INJURIES WERE NOTED:

1) Oblique stab injury of size 2.5x0.5x cavity deep noted in right side chest, 8cm from suprasternal notch with lower end blunt and upper end sharp.

2) Oblique stab injury of size 2.5x0.5x cavity deep noted in middle of chest, 15cm from suprasternal notch with lower end sharp and upper end blunt.

3) Horizontally oblique Stab injury of size 1.5x0.5x cavity deep noted 9.5cm from injury 2 on right side upper abdomen with inner end blunt and outer end oblique.

4) 7cm below injury no 3, 1x0.5x0.5cm noted on right side abdomen.

5) Stab injury of size 2.5x0.5x1.5cm noted in outer aspect of right elbow with inner end sharp and outer end blunt.

6) Stab injury of size 2.5x0.5x0.5cm noted in posterior aspect of right elbow, 2cm below and outer aspect of injury no 5with inner end sharp and outer end blunt.

7) Stab injury of size 2.5x0.5x0.5cm noted in inner side of posterior aspect of lower right arm.

8) Stab injury of size 1.5x0.5x2.5cm noted in outer aspect of right knee joint. 9) Stab injury of size 1.5x0.5x1.5cm noted in outer aspect of left shoulder

10) Stab injury of size 2x0.5x1.5cm noted0.5cm below injury9.

11) Cut injury of size 1.5x0.5x0.5cm noted in back of left index finger.

12) Stab injury of size 2.5x1x3cm noted in left side front of neck with inner end sharp and outer end blunt.

13) 2 superficial cuts of length lem noted below injury no 12.

14) Oblique Stab injury of size 2.5x1x4cm noted in left side outer aspect of neck with lower end sharp and upper end blunt.

15) Oblique Stab injury of size 2.5x0.5x4cm noted in left side backof neck with lower end sharp and upper end blunt

16) 2cm below injury no 15, horizontal Stab injury of size 2.5x0.5x4cm noted in left side back of neck with lower end sharp and upper end blunt

17) 0.5cm above injury no 15, horizontal stab injury of size 1.5x0.5x3cm is noted with inner end sharp. 18) 1cm inner to injury no 17. Oblique Stab injury of size 2x0.5x3cm noted in middle of back of neck with lower end sharp and upper end blunt

19) 0.5cm above injury no 18, Oblique Stab injury of size 2x0.5x4cm noted in middle of neck with lower end sharp and upper end blunt

20) 0.5cm above injury no 19, vertical Stab injury of size 2.5x0.5x4cm noted in middle and left side back of neck with upper end sharp and lower end blunt

21) 0.5cm inner to injury no 20, vertical Stab injury of size 2.5x0.5x4cm noted in middle and left side back of neck with upper end sharp and lower end blunt

22) 2cm outer to injury no 19, oblique Stab injury of size 3x0.5x4.5cm noted in back of neck with upper end sharp and lower end blunt and beveled lower margin.

23) Oblique stab injury of size 2x0.5x4cm noted in left side front of neck with lower end sharp and upper end blunt

24) Oblique stab injury of size 2x0.5x4cm noted in right side front of neck with lower end sharp and upper end blunt.

25) At the level of thyroid cartilage horizontal stab injury of size 2.5x1x4cm noted in middle of right side neck with outer end sharp and inner end blunt

26) 2cm below injury no 25, Oblique Stab injury of size 1x0.5x1.5cm noted with lower end blunt and upper end sharp.

27) 1cm outer to injury no 25. Oblique Stab injury of size 1.5x0.5x3cm noted with lower end blunt and upper end sharp.

28) 1cm outer to injury no 26, horizontal stab injury of size 1.5x1x4cm noted with outer end sharp and inner end blunt.

29) 0.5cm outer to injury no 28, horizontal stab injury of size 1.5x1x4cm noted with outer end blunt and inner end sharp.

30) Below injury no 28 and 29, horizontal stab injury of size 1.5x1x2.5cm noted with outer end blunt and inner end sharp.

31) 2cm outer to injury no30, horizontal stab injury of size 2x0.5x2.5cm is noted with outer end blunt and inner end sharp.

32) 0.5cm above injury no 31, horizontal stab injury of size 2x0.5x2.5cm is noted with outer end blunt and inner end sharp.

33) 1cm above injury no 32, oblique Stab injury of size 2x0.5x3cm noted with lower end blunt and upper end sharp.

34) Back of right side neck, vertical stab injury of size 2.5x1x3.5cm is noted with upper end sharp and lower end blunt.

35) Horizontal stab injury of size 1.5x1x2.5cm noted in back of right side neck with outer end blunt and inner end sharp.

36) Just below injury no 35, Horizontal stab injury of size 1.5x1x2.5cm noted with outer end blunt and inner end sharp.

37) Just below injury no 36, Horizontal stab injury of size 2.5x1x2.5cm noted with inner end blunt and outer end sharp.

38) Horizontal stab injury of size 2.5x1x7cm noted in lower part of outer aspect of right side neck with outer end blunt and inner end sharp.

39) 1cm below injury no 38, horizontal Stab injury of size 2x0.5x3cm noted just above clavicle with outer end blunt and inner end sharp.

40) 0.5cm outer to injury no 39, oblique Stab injury of size 2x0.5x3cm noted with lower end blunt and upper end sharp.

41) Oblique Stab injury of size 2x0.5x8cm noted in back of right shoulder with lower end blunt and upper end sharp

42) Oblique Stab injury of size 2x0.5x2.5cm noted in back of right shoulder with lower end blunt and upper end sharp

43) Oblique Stab injury of size 2x0.5x3cm noted in back of right shoulder with lower end blunt and upper end sharp

44) Bluish Contusion of size 5x3cm noted over right side upper chest

45) Bluish Contusion of size 6x3cm over left eye

46) Reddish Linear Abrasion of multiple sizes from 3 to 6cm noted in right elbow

47) Reddish brown Abrasion of size 2x1cm over outer aspect of right knee joint.

48) Reddish brown coloured multiple linear abrasion of 6to 8cm noted in left arm

49) Reddish brown coloured multiple abrasions of size less than 1 to 2 cm noted in left wrist and elbow

50) Reddish brown Abrasion of size 6x3cm noted on back of right shoulder

51) Reddish brown Abrasion of size 8x3cm noted on back of left shoulder

52) Reddish brown Abrasion of size 3x2 and 4x3cm noted in inner and outer aspect of left knee joint.

2. பிரேத பரிசோதனை அறிக்கையில் 52 காயங்கள் விவரித்து குறிப்பிட்டுள்ளேன். அந்த 52 காயங்கள் என்னால் பிரேத பரிசோதனையின்போது பார்வையிடப்பட்டு இறந்தவர் பிரேதத்தில் இருந்த காயங்களை நான் குறித்துள்ளேன். தலையை கூராய்வு செய்தததில் 8 x 4 செ.மீ. ஒரு கன்றிய காயம் ஆஸ்பிட்டல் பகுதியில் காணப்பட்டது. மூளையில் ஆஸ்பிட்டல் பகுதியில் சப் அரக்கனாய்ட் ஹெமடைஸ் காணப்பட்டது.

3. மார்பு பகுதியை கூறாய்வு செய்ததில் வலது புற மார்பு தசை முழுவதும் ரத்தம் கசிந்த நிலையில் காணப்பட்டது. இருதயத்திற்கு மேல் உள்ள மென்சவ்வில் துளையிடப்பட்டு அதில் 75 ml அளவிலான ரத்தம் காணப்பட்டது. அதன் அடியில் இருந்த இருதயத்தில் எந்த விதமான காயங்களும் இல்லை. வலது பக்க நுரையீரலில் உள்பக்கத்தில் ஒரு குத்து காயம் இருந்தது, அது மேலே இருந்த காயம் எண்.1–னுடன் தொடர்புடையது. வலது புற நுரையீரலில் சுருங்கியும் ஆங்காங்கே ரத்தம் கசிந்த நிலையில் காணப்பட்டது. இடது பக்க நுரையீரல் சீராக இருந்தது.

4. கழுத்துப் பகுதியை கூராய்வு செய்ததில் கழுத்துப் பகுதியில் உள்ள தசைகளில் அதிகமான ரத்தப்போக்குடன் ரத்தம் கசிந்த நிலையில் காணப்பட்டது. அந்தப் பகுதியில் இருந்த ரத்த நாளங்கள், நரம்புகள் ஆகியவை காயம் அடைந்து இருந்தது.

**<u>இதர கண்டறிவுகள்</u>**

5. இருதயம் சீராக இருந்தது. அதன் ரத்த நாளங்கள் சுருங்கிய நிலையில் இருந்தது. நாவடி எலும்பு சீராக இருந்தது. வயிற்றில் 150 கிராம் அளவிலான பகுதி செரிமானமான உணவுடன் பழுப்பு நிற திரவமும் காணப்பட்டது. அதில் பழச்சாறு வாடை காணப்பட்டது. அதன் மென்சவ்வானது வெளிறிய நிறத்தில் காணப்பட்டது. நுரையீரலில் மேற்கண்ட காயங்கள் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் ஆகியவை சீராக இருந்தது. அதன் குறுக்கு வெட்டு தோற்றமானது வெளிறிய நிலையில் காணப்பட்டது.

6. சிறுகுடலில் 50 மில்லி கிராம் அளவில் ஆன பாதி செரிமானமான உணவுடன் திரவமும் காணப்பட்டது. அதில் பழச்சாறு வாடை இருந்தது, அதன் மென்சவ்வானது வெளிறிய நிலையில் காணப்பட்டது. சிறுநீரகப் பையில் 20 மில்லி அளவிலான சிறுநீர் இருந்தது. மூளையில் மேலே குறிப்பிட்டவாறு காயங்கள் இருந்தது. ரத்த மாதிரி மற்றும் விஸ்ரா ஆகியவை சேகரம் செய்யப்பட்டு பகுப்பாய்வுக்கு அனுப்ப பரிந்துரை செய்தேன்.

7. அதனுடைய கருத்துரை கிடைக்கப் பெற்ற பின்னர் எனது இறுதி கருத்துரையாக மேற்கண்ட நபர் கழுத்து மற்றும் நெஞ்சு பகுதியில் ஏற்பட்ட பல்வேறு குத்து காயங்களினால் இறந்திருப்பார் என சான்று வழங்கினேன். அவரது ரசாயன பகுப்பாய்வில் எவ்வித நச்சுப்பொருளோ அல்லது மதுவோ கண்டறியப்படவில்லை என சான்று கிடைக்கப்பெற்றது. இவரது இறப்பானது குளிர்சாதன பெட்டியில் வைப்பதற்கு முன்பு 24 மணி நேரத்தில் இருந்து 36 மணி நேரத்திற்கு முன்பு ஏற்பட்டிருக்கலாம் என்று கருத்துரை வழங்கி உள்ளேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.35 விஸ்ரா அறிக்கை அ.த.சா.ஆ.36, சீராலஜி அறிக்கை அ.த.சா.ஆ.37, பயாலஜி அறிக்கை அ.த.சா.ஆ 38, கெமிக்கல் அறிக்கை அ.த.சா.ஆ.39, இறுதி கருத்துரை அ.த.சா.ஆ.40.

8. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களாலும், ஒன்றுக்கு மேற்பட்ட ஆயுதங்களாலும் இந்த இறந்து போன நபரை தாக்கியிருக்க வாய்ப்புண்டு. நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய சா.பொ. 6, 7, 8, 12 மற்றும் சா.பொ.13 பைப்பாலும் இந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. தற்காப்பு காயங்களான காயங்கள் எண். 5, 11, 14, ஆகியவை காணப்படுகிறது.. மற்றவை அதிகபட்சமாக கழுத்து மற்றும் நெஞ்சு பகுதியில் தான் மற்ற காயங்கள் காணப்படுகிறது. ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எத்தனை மணி நேரம் கழித்து உயிர் பிரிந்த பிறகு விரைப்புத்தன்மை இழக்குமென்றால் 24 மணி நேரத்தில் இருந்து 36 மணி நேரம் வரை விறைப்பு தன்மை இழக்கும் அது மனிதனின் உடல்வாகு, சீதோஷ்ண நிலை, பிரேதம் இருந்த இடம் ஆகியவற்றைப் பொறுத்து அமையும் என்றால் சரிதான். பிரேத பரிசோதனையின் போது ஆய்வாளர் வழக்கின் வரலாறு என்னிடம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார்.

2. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் எதையும் நான் பார்வையிட்டேனா ஆயுதம் என்னிடம் காண்பிக்கப்பட்டதா என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் ஆயுதம் எதுவும் காண்பிக்கவில்லை என்றும், நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ஆயுதங்கள் காட்டப்பட்டு இருந்தால் எத்தனை கத்தியில் ரத்தம் இருந்தது என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல.

3. பொதுவாக ஒரு நபர் வனத்திற்குள் அரை நிர்வாணமாக செல்லும் போது மது போதையில் தள்ளாடி நடக்கும்போது இரவு நேரத்தில் காட்டு விலங்குகள் கரடு முரடாக தாக்கக்கூடிய வாய்ப்பு உண்டு என்றால் அவ்வாறு தாக்குவதற்கான வாய்ப்புகள் கிடையாது. காட்டுப்பகுதியில் மது போதையில் ஒரு நபர் நிற்கும்போது அவரை வனவிலங்குகள் தாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல.

4. வனப்பகுதியில் கொம்புள்ள வரையாடுகள், மான்கள் மற்றும் மாடுகள் இருக்கும் என்றும், அவர் அரை நிர்வாணத்தில் மதுபோதையில் இருந்தபோது அவரை தாக்கியிருக்க வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. 52 குத்து காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரியல்ல, குத்துக்காயங்கள், வெட்டு காயங்கள், சிராய்ப்பு காயங்கள் அதனால் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விலங்கு மிரண்டு அவர் மீது மோதும்போது அவருக்கு வீக்கம் காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரியல்ல.

5. குத்துக் காயத்தை பொருத்தவரையில் நான் எனது அறிக்கையில் இறப்பிற்கான காரணம் கூறாமல் தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் அவ்வாறுதான் சொல்லி உள்ளேன் என்றும், தற்போது வழக்குக்காக மாற்றி குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. கூர்மையான குத்துக் காயங்கள் என்று நான் எனது போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6. வனவிலங்குகளான காட்டு மாடுகள் வரையாடுகள் மற்றும் மான்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஒரு வகையில் கூர்மையான கொம்புகள் உண்டு என்றால் மான்களுக்கு இருக்கலாம் ஆனால் அதனால் இந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. மாடுகளுக்கும் கொம்புகள் கூர்மையாக இருக்கும் என்றும் சாய்ந்த நிலையில் அந்த கொம்புகள் இருக்கும் என்றால் இருக்கலாம், ஆனால் இந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. ஒரு மானோ, ஒரு மாடோ இறந்து போன நபரை பலவகையில் முரட்டுத்தனமாக குத்தும் போது இவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் வாய்ப்பில்லை.

7. நான் வழக்கிற்காக பொய்யாக குறிப்படுகிறேன் என்றும், அவ்வாறான தாக்குதலின் காரணமாகத்தான் இறந்து போனவருக்கு குத்து காயங்கள் ஏற்பட்டுள்ளதென்றால் சரியல்ல. ஒரு நபர் அதிக ரத்தப்போக்கு காரணமாக அவரது உடலிலிருந்து ரத்தம் அதிகம் வெளியேறும் போது அவர் மது அருந்தியிருந்தாலும் அந்த மது அருந்தியதற்கான தடயம் தெரியாது என்றால் சரியல்ல.ஒரு மது போதையில் தள்ளாடி கொண்டிருக்கும் ஒரு நபரை பின்பக்கமாக இரண்டு நபர்கள் பிடித்துக் கொண்டால் இரண்டு கைகளைப் பிடித்துக் கொண்டால் அவருக்கு பின்பக்கத்தில் காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

8. முதுகின் மேல் பகுதிகளில் காயங்கள் ஏற்படுத்த வாய்ப்பு உண்டு. மது போதையில் தள்ளாடிக் கொண்டிருக்கும் ஒரு நபரை மிகவும் அழுத்தமாக பின்பகுதியில் இரண்டு நபர்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும்போது பின்பக்கத்தில் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் முன்பக்கத்தில் மட்டுமே காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரியல்ல. மாடுகளால் குத்து காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் இந்த காயத்தின் தன்மை மற்றும் ஆழம், காயம் ஏற்பட்டுள்ள இடம், ஆகியவற்றை பார்க்கும்போது மாடுகளால் குத்து காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புகள் கிடையாது. அதனால்தான் காரணம் குறிப்பிடாமல் நான் எனது இறுதி கருத்துறையில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

9. மாட்டின் கொம்புகள் முனைப்பக்கம் கூர்மையாகவும், பின்னால் அகலமாகவும் இருக்கும் என்றால் சரிதான். நான் பார்வையிட்ட காயங்கள் குத்து காயங்கள் உள்பகுதி ஆழமாகவும் வெளிப்பகுதி, அகலமாகவும் இருந்துள்ளளதொன்றால் சரியல்ல. எல்லா காயங்களும் 2.00 சென்டிமீட்டர் அளவு மட்டுமே அகலம் உள்ளது. அந்த காயங்கள் மேல் பகுதியில் அகன்று இருப்பதாக நான் எனது விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

10. இறந்து போன நபரின் உடலில் உள்ள காயங்கள் 2.5 Cm, 1.5 Cm மற்றும் 1.00 Cm ஆழம் கொண்ட குத்து காயங்கள் என நான் சொல்லி உள்ளேன் என்றால் அகலம் தான் அவ்வாறு சொல்லி உள்ளேன், ஆழம் ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறாக குறிப்பிட்டுள்ளேன். எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் எங்காவது 14.5 சென்டிமீட்டர் நீளம் கொண்டது என்றும், 12.5 சென்டிமீட்டர் நீளம் கொண்ட என்றும் நான் சொல்லி உள்ளேனா என்றால் நான் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை.

11. ஒரு நபரை கொலை வெறியுடன் தாக்கப்படும்போது அந்தக் கத்தியின் கூர்முனை முழுவதும் அவரது உடல் பாகத்தில் இறங்கக்கூடியதற்கு வாய்ப்பு உண்டு என்றால் எந்த இடத்தில் குத்துகிறார்களோ எவ்வளவு வேகமாக குத்துகிறார்களோ அதை பொறுத்து அது அமையும். அவ்வாறு வேகமாக குத்தும்போது அந்த கத்தியின் கூர்முனை அச்சு கைப்பிடி அச்சு அவரது உடலில் பதிந்திருக்கும் என்றால் வாய்ப்புண்டு ஆனால் இந்த வழக்கை பொறுத்தவரை அவ்வாறு கைப்பிடி அச்சு எதுவும் பதியவில்லை.

12. பலதரப்பட்ட குத்து காயங்கள் மற்றும் வெட்டு காயங்களால் தாக்கப்படும்போது காயம்பட்ட நபரின் ரத்தம் அந்த கத்தியில் முழுமையாகவும் கைப்பிடியிலும் பதிந்திருக்கும் என்றால் வாய்ப்பு உண்டு. கைப்பிடியில் அவ்வாறு ரத்தக்கரை படித்திருந்தால் எதிரிகளின் கைரேகையும் அதில் ஒட்டி இருக்கும் என்றால் அது பற்றி என்னால் கருத்து சொல்ல முடியாது. என்னிடம் காண்பிக்க

கூடிய சா.பொ.12 கத்தியில் ரத்தக்கரை கத்தியின் பாகத்தில் முழுமையாக படித்துள்ளது என்றும், கைப்பிடியில் பதியவில்லை என்றால் அது பற்றி என்னால் கருத்து சொல்ல முடியாது. அந்த கத்தியில் இறந்தவர் அது ரத்தத்தை தடவியும் அனுப்புவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் சரியல்ல

13. நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய நான்கு கத்தியால் குத்தும் போது ஒரு நபரின் எலும்பு பகுதி மற்றும் கழுத்துப் பகுதியில் குத்தும் போதும், தோள்பட்டையில் குத்தும்போதும், வயிற்றில் குத்தும்போதும் தொடர்ச்சியாக குத்தும்போது அதன் கூர்முனைகள் வளைவதற்கும் மழுங்குவதற்கும் வாய்ப்பு உண்டு என்றால் கத்தியின் தன்மை மற்றும் அதில் செய்யப்பட்டுள்ள பொருளின் தன்மைக்கேற்ப அது அமையும். என்னிடம் காண்பிக்கக்கூடிய கத்தியை நேரடியாக காட்டினால் அதன் வளையும் தன்மை பொறுத்து என்னால் சொல்ல முடியும் என்றால் சரியல்ல.

14. என்னிடம் காண்பிக்க கூடிய கத்தி எளிதாக வளையக்கூடிய கத்தி என்றும், அதை எளிதில் கிடைக்கக்கூடிய கத்தி என்றால் சரியல்ல. அவைகள் கூர்முனைகள் மழுங்காமல் புதிது போல் உள்ளது என்றால் சரியல்ல. ஒரு நபரின் தலையிலும், தோள்பட்டை, மண்டை ஆகிய இடங்களில் பிவிசி பைப்பால் தாக்கும்போது அந்த பைப் சுக்கு நூறாக உடைவதற்கு வாய்ப்பு என்றால் சரியல்ல.

15. என்னிடம் காண்பிக்க கூடிய பைப் அமுங்கும் தன்மை கொண்டது என்றால் சரியல்ல. நேரடியாக பார்த்தால் மட்டுமே அது பற்றிய கருத்து சொல்ல முடியும் என்றால் சரியல்ல. இந்த பைப்பை கொண்டு தலையில் அடிக்கும்போது இந்த பைப் சுக்கு நூறாக உடையும் என்றால் சரியல்ல. பைப் வெடிக்கும் அளவுக்கு வேகமாக தாக்கினால் வெடிப்பதற்கும் வாய்ப்புண்டு.

16. ரத்தக்கரை படுவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் சரியல்ல. மருத்துவர் நேரில் வந்து பார்த்தால் மட்டுமே கருத்துரை சொல்ல முடியும் என்றால் சரியல்ல. நான் கணினி வாயிலாக சொல்லும் கருத்துரை வழக்கிற்கு மாறாக உள்ளது

என்றால் சரியல்ல. ரத்தம் படிந்த கத்தி மண் மற்றும் இலைகளுக்கு இடையே இருக்கும் பட்சத்தில் அதில் மண்களும், இலைகளும் ஒட்டி இருக்கும் என்றால் அது பற்றி என்னால் கருத்து சொல்ல முடியாது. என்னிடம் காண்பிக்கக்கூடிய கத்தியில் அவ்வாறு எதுவும் ஒட்டவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நேரடியாக பார்த்தால் குறிப்பிட்டுச் சொல்ல வாய்ப்புண்டு என்றால் சரியல்ல.

17. 04.09.2024–ம் தேதியன்று இரவு 9:30 மணியளவிலிருந்து 05.09.2024–ம் தேதியன்று இரவு 9:30 மணி வரை 24 மணி நேரம் என்றால் சரிதான். 05.09.2024– ஆம் தேதியில் இருந்து 06.09.2024 ஆம் தேதி இரவு 9.30 மணி வரை என்பது 24 மணி நேரம் என்றால் சரிதான். 48 மணி நேரத்திற்கு பிறகு மேற்கொண்ட பிரேத பரிசோதனை 62 மணி நேரத்திற்கு பின்பு தான் பிரேத பரிசோதனை நிகழ வாய்ப்புண்டு என்றால் சரிதான். எனவே 62 மணி நேரத்திற்கு முன்பு தான் உயிரிழப்பு ஏற்பட்டு இருக்க வாய்ப்புண்டு என்றால் சவக்கடங்கில் குளிர்சாதன பெட்டியில் வைப்பதற்கு முன்பு எவ்வளவு மணி நேரத்திற்கு முன்பு மரணம் நிகழ்ந்தது என நான் கருத்துறை சொல்லி உள்ளேன்.

18. 36 மணி நேரத்திற்கு முன்பு உயிர் பிரிந்திருக்க வாய்ப்புண்டு என நான் சொல்லியிருக்கும் கருத்துறை வைத்து பார்க்கும்போது 05.09.2024ம் தேதியன்று இரவு 9:30 மணிக்குத்தான் உயிர் பிரிந்திருக்க வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. 04.09.2024–ம் தேதியன்று எந்தவித சம்பவமும் நிகழ வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையாக பிரேத பரிசோதனை மேற்கொண்டு இருந்தால் குத்து காயங்கள் எதனால் ஏற்பட்டது என்று என்னால் தெளிவாக சொல்லியிருக்க முடியும் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்க கூடிய வழக்கு சொத்தினால் மரணம் நிகழவில்லை என்றும், விலங்குகள் தாக்குதலால் மரணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சிறாய்ப்பு காயங்கள், குத்து காயங்கள், வெட்டுக் காயங்கள், வீக்க காயங்கள், ரத்தம் உறைந்த காயங்கள் ஆகியவை

விலங்கு தாக்கி இழுக்கும்போது மட்டுமே ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரியல்ல.

19. மது போதையில் தன்னை பாதுகாத்துக் கொள்ள அவர் கைகளை தற்காப்புக்காக எடுத்தபோது தான் இந்த காயங்கள் அவர் கைகளிலும் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்தவரை நான் நேரில் விசாரணைக்கு ஆஜரானால் மட்டுமே உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. வழக்கின் சொத்துக்களை பார்வையிட்டு அறிக்கை சொல்ல வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும், இந்த இறப்பிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. காட்டு விலங்கின் கூர்மையான கொம்புகளால் இந்த காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.17 16:01:16 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.